# KAMARAJ
COLLEGE OF ENGINEERING & TECHNOLOGY
S.P.G. Chidambara Nadar - C. Nagammal Campus,
S.P.G.C. Nagar, K.Vellakulam - 625 701, Near Virudhunagar, Madurai District.
Accredited by NAAC with "A" Grade

E-mail : mail@kamarajengg.edu.in Ph. : 04549 – 278171 & 278791


தேதி : 16/10/2017

அன்பார்ந்த பெற்றோர்களே !

வணக்கம். இப்பவும் விருதுநகர் காமராஜ் பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி தங்களை போன்ற தலைசிறந்த பெற்றோர்களது ஆதரவுடன் சீரும் சிறப்புடன் நடைபெற்று வருகிறது.

நமது காமராஜ் பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியில் 2017-2018-ம் கல்வி ஆண்டில் இறுதி ஆண்டு பயிலும் மாணவ / மாணவியர்களின் நாளது தேதி வரை 57 மாணவ / மாணவியர்கள் பணி இடஅமர்வு பெற்றுள்ளனர் என்பதனை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

- ✶ நமது கல்லூரியின் பயோடெக்னாலஜி துறையில் இறுதி ஆண்டு பயிலும் S.ப்ரீத்தி மற்றும் K.ராதிகா ஆகிய மாணவியர்கள் ஜப்பானில் நடைபெற இருக்கும் **Fujio Cup Quiz Competition (NCRM NICHE 2017)** எனும் போட்டியின் இறுதி சுற்றிற்கு தகுதி பெற்று வரும் 22/10/2017-ந் தேதி கலந்து கொள்ளவிருக்கின்றனர் என்பதனை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்

- ✶ நமது கல்லூரியின் கணினி அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறையில் மூன்றாம் ஆண்டு பயிலும் V.தினேஷ்குமார் மற்றும் G.குருபாண்டியன் ஆகிய மாணவர்கள் Online மூலம் உலகளவில் நடைபெற்ற **Android App International Competition**-ல் கலந்து கொண்டு PET Amubulance எனும் செயலியினை Develop செய்து முதல் ஐந்தாவது இடத்தை பிடித்துள்ளனர் என்பதனை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த போட்டியில் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட மாணவ / மாணவியர்கள் பங்கேற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

- ✶ நமது கல்லூரியின் மின்னணு மற்றும் தகவல் தொடர்பியல் துறையில் பயிலும் மாணவர்கள் கடந்த 06.10.2017-ந் தேதி அழகப்ப செட்டியார் பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியில் நடைபெற்ற Symposium-ல் கீழ்க்கண்ட மாணவர்கள் வெற்றி பெற்றுள்ளனர் என்பதனை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

| Competition Name | Student Name | Position |
|---|---|---|
| Paper Presentation | V.தேவகுரு, N.விக்னேஷ் ஜெயந்தன் S.ஹரீஷ், G.S.மாதவன் | I |
| | A.R.முன்னவர் ஹீசேன், S.சிட்ரிக் ரால்பின் | II |
| Project Presentation | S.பவித்ரா ஜோஷி, N.விக்னேஷ் ஜெயந்தன் V.தேவகுரு | III |
| Tech Savvy | S.பவித்ரா ஜோஷி, N.விக்னேஷ் ஜெயந்தன் V.தேவகுரு | I |
| | A.R.முன்னவர் ஹீசேன், S.சிட்ரிக் ரால்பின் | II |
| Tricky Circuits | A.R.முன்னவர் ஹீசேன், S.சிட்ரிக் ரால்பின் | II |

நமது கல்லூரி மாணவ / மாணவியர்கள் தங்களது திறனை மாநில மற்றும் உலக அளவில் நிரூபித்து வருகின்றனர். மாணவ / மாணவியர்கள் கல்வி மற்றும் ஒழுக்கம் சாாந்த நடவடிக்கைகளை மேம்படுத்தும் பொருட்டும், கல்லூரி வளாகத்தினுள் மாணவ / மாணவியர்களின் ஒற்றுமை உணர்ச்சியினை வளர்க்கும் விதமாகவும் ஒரு புதிய முயற்சியாக வரும் **01/11/2017-ந் தேதி முதல் மாணவ / மாணவியர்கள் கல்லூரிக்கு வரும் அனைத்து நாட்களிலும் Formal Dress அணிந்து வர தங்களது மகன் / மகளை அறிவுறுத்துமாறு தங்களை கேட்டுக்கொள்கிறேன்.**

**குறிப்பு :-**

**சாதாரண உடை (மாணவர்களுக்கு)**

- ➢ மாணவர்கள் கண்டிப்பாக அரைக்கை / முழுக்கை சட்டை டக் இன் (Tuck in) செய்து, ஜீன்ஸ் பேண்ட் அல்லாத துணியில் தைத்த பேண்ட்கள் அணிந்தும் Formal Shoes-ல் கல்லூரிக்கு வர வேண்டும் (**Canvas Shoe** அணியக் கூடாது).

**சாதாரண உடை (மாணவியர்களுக்கு)**

- ➢ மாணவியர்கள் சுடிதார் மட்டும் அணிந்து Cut Shoe-ல் வரவேண்டும்.

நேர்முகத்தேர்வுக்கு வழிகாட்டுதலாகவும் முன்மாதிரியாகவும் திகழ்வதற்கு இந்த முயற்சியானது இன்றியமையாததாகிறது.

நன்றி !

இப்படிக்கு,

முதல்வர்